# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.67/2013

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள்–21–07–2026.

பெயர் = ஜெயக்குமார்

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் கு.வி.–

(1) பிரதிவாதிகள் உறவின்முறையில் நான் என்ன பொறுப்பில் இருக்கிறேன் என்றால் முறைகாரர். எத்தனை வருடமாக இந்த பதவியில் இருக்கிறேன் என்றால் 15, 16 வருடங்களாக இருக்கிறேன். இந்த பதவி பரம்பரை பதவியா, தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியா என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவி. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பிராது வரைபடத்தில் உள்ள தாவா 1 வது லக்கச்சொத்து என்னவென்றால் எங்கள் சுவர் என சாட்சி கூறுகிறார். கிழமேல் எத்தனை அடி தென்வடல் எத்தனை அடி என்றால் எனக்குத் தெரியாது. எந்தவருடம் சுவர் கட்டினார்கள் என எனக்குத் தெரியாது. யாருடைய நிருவாகத்தின்போது அந்த சுவர் கட்டினார்கள் என எனக்குத் தெரியாது. நான் சொல்லும் சுவர் வாதிகளின் வீட்டின் தெற்குசுவர் என்றால் சரிதான். அந்த சுவர் செங்கல், சிமிண்ட் வைத்து கட்டப்பட்டது என்றால் சரிதான். எத்தனை அடி உயர சுவர் என எனக்குத் தெரியாது. அந்த சுவர் தென்வடலாக 1.1/2 அடி உயரம் என்றால் சரிதான். சுவரின் வடக்கு பக்கம் 3/4 அடியில் வாதிகள் இரண்டு மாடி வீடுகட்டியுள்ளனர் என்றால் சரிதான். அந்த சுவரின் தெற்குபக்கம் உள்ள 3/4 அடி தான் தாவா என்றால் சரிதான்.

(2) 1 வது லக்கச்சொத்திற்கு தெற்கே தென்வடலாக 1 அடி வாதிகள் உரிமைகோருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் தரமுடியாது என சாட்சி கூறுகிறார். 2ம் வாதி அசோகன் வீடு கிழக்கு பார்த்த வாசல் என்றால் தெரியாது மேற்குபுறம் வாசல் உள்ளது என சாட்சி கூறுகிறார். 2 வது லக்கச்சொத்திற்கும் கிழக்கே தென்வடலாக சந்து உள்ளது என்றால்

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

தெரியாது. 1,2 லக்கச்சொத்திற்கு கிழக்கே வாதிகள் நிலைகதவு வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த நிலைகதவை நான் அடைத்து வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நிலைகதவு கிடையாது. ஆலோபிளாக் கற்கள் வைத்து நிலைகதவை அடைத்துவிட்டோம் என்றால் சரியல்ல அது எங்களது கட்டிடம் என சாட்சி கூறுகிறார். எங்கள் உறவின்முறை கட்டிடம் எத்தனை அடி என்றால் எனக்கு சரியாகத் தெரியாது. கிழமேல் 11 தச்சுக்கம்பு தென்வடல் 19 தச்சுக்கம்பு உள்ளது. ஒரு தச்சுகம்பு 3.3 அடி இருக்கும் என சாட்சி கூறுகிறார். ஒரு தச்சுக்கம்பு என்பது 2.1/2 அடி இருக்கும் என்றால் எனக்குத் தெரியாது. எங்களுக்கு பாத்தியமான சொத்தை கூடுதலாக காண்பித்து வாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டி வீண்விவகாரம் செய்கிறோம் என்றால் சரியல்ல. வாதிகளின் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எங்கள் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றும் ஞாபகமில்லை. எங்கள் சொத்திற்கு பட்டா கொடுத்துள்ளார்களா என்றால் பட்டா கொடுத்திருக்கிறார்கள். அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் சொத்து தாவாச்சொத்தில் சேரவில்லை என்பதால்தான் பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(3) நான் மேலே சொன்ன 11 x 19 தச்சுக்கம்பு அளவு முழுவதுமாக நான் வாடகைக்கு கொடுத்த நபர் கட்டிடம் கட்டியுள்ளார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தென்மேற்கு மூலையில்தான் நான் வாடகைக்கு கொடுத்த நபர் கட்டிடம் கட்டியுள்ளார் என்றாலும் சரியல்ல. ஆலோபிளாக் கற்கள் வைத்து கட்டியுள்ளார் என்றால் சரிதான். ஒரே அறையாக கட்டியுள்ளாரா இரண்டு அறையாக கட்டியுள்ளாரா என்றால் இரண்டு அறைகள். இரண்டு அறைகளுக்கும் கிழக்கு பார்த்த வாசல், தெற்கு பார்த்த வாசல் என்றால் சரியல்ல. இரண்டிற்கும் வடக்கு பார்த்த வாசல்தான். வடக்கு பார்த்த வாசல் என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாடகைக்கு கொடுத்த நபரின் கட்டிடத்தை அடுத்து கிழக்கே எவ்வளவு காலியிடம் உள்ளது என்றால் காலியிடமே இல்லை என சாட்சி கூறுகிறார். எங்கள் சொத்திற்கும் தெற்கே வீதி உள்ளது. வீதியின் பெயர் தெரியாது. எங்கள் உறவின்முறை சொத்திற்கு மேற்கே வீதி உள்ளது. பெயர் தெரியாது. எங்கள் சொத்திற்கும் தெற்கே கேட்

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

அமைப்பு உள்ளது என்றால் வாசல் உள்ளது என சாட்சி கூறுகிறார். மரக்கதவு போட்டு வாசல் வைத்துள்ளோம். நான் சொல்வது பொய் என்றாலும், இரும்புகேட் போடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மரக்கதவு வாசல் எப்போது வைத்தோம் என்றால் தெரியாது. பாதை வாசல் எத்தனை அடி அகலம் என எனக்குத் தெரியாது.

(4) பெயிண்டிங் கான்டிராக்டரிடம் கொடுத்த இடம் ஆதியில் மண்சுவர் ஓட்டுவீடாக இருந்தது என்றால் சரிதான். அது எத்தனை வருடத்திற்கு முன்பு இடிந்தது என சரியாகத் தெரியாது. அதன்பின்னர் எங்களிடம் அனுமதி பெற்று ஆலோபிளாக் கல் வைத்து கட்டி மேலே ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்டுள்ளார் என்றால் சரிதான் அவ்வாறு ஏற்படுத்தி எத்தனை வருடம் இருக்கும் என ஞாபகமில்லை. பெயிண்டிங்கிற்கு பயன்படுத்தும் சாரங்கள் வாதிகளின் வீட்டின் தெற்குசுவரில் சாய்த்து வைத்துள்ளார்கள் என்றால் அது எங்கள் சுவர் என சாட்சி கூறுகிறார். அந்த மரங்களின் உயரம் எவ்வளவும் இருக்கும் என தெரியாது. மரங்களை சுவரில் சாய்த்து வைப்பதால் சுவரில் பாதிப்பு ஏற்படுகிறது என்றால் எங்கள் சுவர் என சாட்சி கூறுகிறார். பாதைக்கும் கிழக்கே தேரிநாடார் வீடு உள்ளது. ஜீவரத்தினம் யார் என எனக்குத் தெரியாது. தேரிநாடாருக்கு அது பூர்வீகச்சொத்தா என எனக்குத் தெரியாது. ஜீவரத்தினம் என்பவருக்கு இடம் உள்ளதா என்றால் இல்லை. தேரிநாடார் வீடு எந்த பக்கம் பார்த்த வாசல் என்றால் வடக்கு பக்கம். தேரிநாடார் வீட்டிற்கு கிழமேல் தெரு உள்ளதா என்றால் ஆமாம். எத்தனை அடி தெரு என எனக்குத் தெரியாது. தேரிநாடார் வீட்டின் வடக்கு பக்கம் எத்தனை சன்னல் வைத்துள்ளார் என எனக்குத் தெரியாது. தெருவிற்கு வடக்கே 2ம் வாதி அசோகன் வீடு உள்ளது என்றால் தெரியாது.

(5) அசோகன் வீட்டிற்கும் வடக்கே சந்திரசேகர் வீடு உள்ளது என்றால் தெரியாது. தேரிநாடார் வீட்டின் மேற்குசுவரில் எத்தனை சன்னல் வைத்துள்ளார் என எனக்குத் தெரியாது. தேரிநாடார் வீட்டின் சாக்கடை அவர் வீட்டின் மேற்கே உள்ள அமைப்பு வழியாக செல்கிறது என்றால் சரிதான் அவரது இடம் வழியாக செல்கிறது. தேரிநாடார் வீட்டிற்கு மேற்கு பக்கம் அவருக்கு எத்தனை அடி இடம் உள்ளது என எனக்குத் தெரியாது. பிராது வரைபடத்தில் என்ன தவறு உள்ளது என சொல்ல முடியுமா

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

என்றால் அனைத்தும் தவறாக உள்ளது என சாட்சி கூறுகிறார். குறிப்பிட்டு என்ன தவறு உள்ளது என சொல்ல முடியுமா என்றால் எல்லாமே தவறாகதான் உள்ளது. 2ம் வாதி 1ம் வாதி எழுதிக்கொடுத்த உயில்மூலம் உரிமைகோருகிறார் என்றால் சரிதான். உயிலின்படி எழுதிக்கொடுத்தவர் இறந்த பிறகு சொத்தின் உரிமை வரும் என்றால் வாரிசுகளுக்கு உரிமைகிடைக்கும் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்திற்கும் வடக்கே உள்ள வீடுகள் 1ம் வாதிக்கு பாத்தியமா என்றால் எனக்கு சரியாகத்தெரியாது. தேரிநாடார் வீட்டிற்கும் மேற்கே 2 அடி பொதுச்சந்து உள்ளது என்றால் சரியல்ல. அந்த வழியாகத்தான் ஆதியிலிருந்து தெற்கே உள்ள தெருவிற்கு வந்து செல்வார்கள் என்றால் சரியல்ல.

(6) வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 மாதத்திற்கு முன் தாவா பாதையை நாங்கள் அடைத்தோம் என்றால் சரியல்ல. எங்களது சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். பி.வா.சா.ஆ.1 பற்றி எனக்குத் தெரியாது. பி.வா.சா.ஆ.2 பற்றிய விவரமும் எனக்குத் தெரியாது. தாவாச்சொத்தை பற்றி எந்த விவரமும் எனக்குத் தெரியாது நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவாச்சொத்து வாதிகளுக்கு தான் பாத்தியம் உறவின்முறைக்கு பாத்தியமல்ல என்றால் சரியல்ல. தாவா 3வது லக்கச்சொத்தை நாங்கள் ஆள்பலத்துடன் ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் அதனை இடித்துக்கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தில் வந்துபோய் புழங்க வாதிகளுக்கு உரிமைஉள்ளது அதில் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கொடுக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. கான்கிரீட் செட்போட்டுள்ளதற்கு மேற்கே நாங்கள் தகரத்தை வைத்து அடைத்துவைத்துள்ளோம் என்றால் சரிதான் எங்கள் வசதிக்காக வைத்துள்ளோம் எத்தனை அடி நீளத்தில் வைத்துள்ளோம், எந்த வருடம் வைத்தோம் என தெரியாது. தகர அடைப்பிற்கும், வாதிகளின் வீட்டிற்கும் இடையே 2 அடி இடைவெளி உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு அவர்கள் கேட்கும் பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S